https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

28TH APRIL 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 77





# அரசின் ஜனாதிபதி வேட்பாளர் யார்?

## தேர்தல் அறிவிக்கும்வரை திரைமறைவில்.. மொட்டு-ஐ.தே.க கூட்டாகத் தீர்மானம்

ஜனாதிபதி தேர்தலை தேர்தல்கள் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கும்வரை அரச தரப்பின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை வெளிப்படுத்துவதில்லை என்று மொட்டு கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் கூட்டாக முடிவெடுத்துள்ளன.

கடந்த 25ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் அரச கட்சி எம்பிக்களின் விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது.அந்தக்

02



## ரணில் போட்டியிடுவாரா?

### ஜூன் இறுதியில்தான் அறிவிப்பார்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிடுவாரா,இல்லையா என்று ஜூன் மாதம் இறுதியில்தான் அவர் அறிவிப்பார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

சில நாட்களுக்கு முன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் பசில் ராஜபக்சவுக்கும்

02

## வீட்டில் இருந்தவாறே பொலிஸ் முறைப்பாடு

ஸ்ரீ லංකා පොලීසිය
Sri Lanka Police

பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லாமல் வீட்டில் இருந்தவாறே இணையத்தளத்தின் ஊடாக முறைப்பாடுகளை பதிவு செய்யும் புதிய முறைமை ஒன்றை பொலிஸ் திணைக்களம் விரைவில் அறிமுகம் செய்கிறது.

அந்த முறைப்பாடுகளின் அடிப்படையில்,பொலிஸ் குழுக்கள் முறைப்பாட்டாளரின் வீடுகளுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொள்வர்.

அவ்வாறு முறைப்பாடு செய்ததும் உடனடியாக சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அதுபற்றி தகவல் வழங்கப்படும்.

ஹரே கிருஷ்ணா

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்

புது ஆலயத்திற்கான வர்ணபூச்சு வேலைகளும் மற்றும் முடிவு வேலைகளும் நடைபெற்று கொண்டிருக்கின்றன





ராதா கிருஷ்ணா
சீதா ராம்
ஸ்ரீ பாலாஜி
நரசிம்மர்

உயரமான கோபுரம் தசவதார மூர்த்திகள், பளிங்கு தரைகள் மற்றும் கண்கவர் வேலைபாடுகள்.



வர்ணபூச்சுக்கான மதிப்பீடு
ரூபா.5,000,000/= (5 மில்லியன்)
அன்பான பக்தர்களே நீங்களும் இச்சேவையில் பங்கு பற்றி விரைவில் கும்பாபிஷேகம் செய்து பகவானின் அருளை பெறுவோமாக.

Bank Detials

Commercial Bank
Bank Branch - Kotahena Branch
Account Name - ISKCON -TEMPLE FUND
Account No. - 1120017042
Swift Code - CCEYLKLX

Hatton National Bank
Bank Branch - Jempettah Street
Account Name - ISKCON
Account No. - 207010000891
Swift Code - HBLILKLX

சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம்
ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ. ச. பக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதா
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
+94 772288166 +94 112433325
188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு- 13
E-Mail: info@iskconsrilanka.org Web: www.iskcon.lk
ISKCON SRI LANKA

புதுசுடர்
www.puthusudar.lk
2024 APRIL 28 - SUNDAY

# சந்திரிகாவை வீழ்த்துவாரா மைத்திரி?

இலங்கையின் ஜனாதிபதிகளில் கிறுக்குத்தனமாக முடிவெடுக்கின்ற ஒரு ஜனாதிபதியாக இருந்தவர் மைத்திரிபால சிறிசேனதான்.

அவர் ஜனாதிபதி பதவியில் இல்லாத நிலையிலும்கூட அதையே செய்கிறார்.

நல்லாட்சியின்போது ரணிலும் மைத்திரியும் இணைந்து ஆரம்பத்தில் நன்றாகவே ஆட்சி செய்யத் தொடங்கினர்.

பின்னர் இருவருக்கும் இடையில் மனக்கசப்பு ஏற்படத் தொடங்கியதும் ரணிலுக்கு எதிராக சில கிறுக்குத்தனமான வேலைகளில் இறங்கத் தொடங்கினார்.

அதில் முக்கியமானதுதான் யாருமே எதிர்பார்த்திராத தருணத்தில் ரணிலை பிரதமர் பதவியில் இருந்து தூக்கிவிட்டு மஹிந்தவை பிரதமராக நியமித்தமை.

அப்போது கீரியும் பாம்புமாக இருந்த மஹிந்தவும் மைத்திரியும் ஒன்றுசேருவார்கள் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

மைத்திரி ஜனாதிபதியானதும் மஹிந்தவிடம் இருந்து சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைமைத்துவப் பதவியைக்கூட பறித்திருந்தார்.

இதனால் இருவருக்கும் இடையிலான விரிசல் மேலும் அதிகரித்தது.இதனால் அவர்கள் இணைவதென்பது சாத்தியமற்றதாகவே இருந்தது.

ஆனால், ரணிலுடன் முரண்பட்டுக்கொண்டதால் –அவரைப் பதவியில் இருந்து நீக்குவதற்காக யாருடனும் கூட்டுச் சேர்வார் என்று யாரும் நம்பவில்லை.

அப்படி யாரும் எதிர்பார்த்திராத தருணத்தில்தான் ரணிலை நீக்கிவிட்டு மஹிந்தவைப் பிரதமராக்கினார்.

அவர் எடுத்த அந்த முடிவு அவருக்கு அவப்பெயரையே பெற்றுக்கொடுத்தது.

அதன்பின் அவர் மொட்டு கட்சியுடன் இணைந்து 2020 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோதும் அவருக்கு அந்தக் கட்சிக்குள் மதிப்புக் கிடைக்கவில்லை.

இதனைத் தொடர்ந்தும் அவரது செயற்பாடுகள் எந்தவொரு முன் அறிவித்தாலும் இல்லாத– சற்றுகூட ஊகிக்க முடியாத கிறுக்குத்தனமாகவே இருந்தன.

அதில் ஒன்றுதான் அவர் தயாசிறி ஜயசேகரவை சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொது செயலாளர் பதவியில் இருந்து நீக்கியமை.

அதுவும் அவருக்கு நல்ல பெயரை ஈட்டிக்கொடுக்கவில்லை.

அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு மீண்டும் அவரை அழைத்து பிரதி சிரேஷ்ட உப தலைவர் பதவி

தருகிறேன் என்று கூறினார்.

தயாசிறி அதை ஏற்கவில்லை அதனைத் தொடர்ந்து துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவண்ண மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோரையும் அவர்கள் வகித்து வந்த கட்சி பதவிகளில் இருந்து நீக்கினார். அவர்கள் நீதிமன்றம் சென்றனர்.

இப்போது மைத்திரி கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு நீதிமன்றம் இடைக்கால தடை ஒன்றை விதித்துள்ளது.

மைத்திரியை முற்றாக நீக்கிவிட்டு சந்திரிகாவை கட்சியின் தலைவராக நியமிப்பதற்கு மைத்திரியின் எதிரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் மைத்திரி சில நாட்களுக்கு முன் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பான பரபரப்பு அடங்கும் முன்பே அடுத்த சிக்கலில் சிக்கியுள்ளார் மைத்திரி.

மைத்திரியின் திறமையற்ற நிர்வாகமே அவருக்கு எதிராக மாறியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

இந்தக் கட்சியை மீண்டும் முற்றாக கைப்பற்றி மைத்திரியை விரட்டிவிடுவதற்கான ஏற்பாட்டில் சந்திரிகா அம்மையார் முழுமையாகவும் வெளிப்படையாகவும் இறங்கினார்.

சந்திரிகாவின் இந்தத் திட்டத்தை மைத்திரி முறியடிப்பாரா? அதற்கான திறமை அவரிடம் உள்ளதா ?

## அரசின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.**

**மஹிந்த ராஜபக்ஸ, பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.**

**வேட்பாளர் யாரென்று தற்போதே கருத்துக் கூறுவதால் அரசு மேற்கொண்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்று அந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.**

**ஜூலை மாதம்வரை அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அனைத்து அரச எம்பிக்களும் கூட்டாக ஆதரவு வழங்க வேண்டும் என்றும் வேட்பாளர்பற்றிய பேச்சை எவரும் எடுக்கக்கூடாது என்றும் அபிவிருத்தி பணிகளில் மாத்திரமே கவனம் செலுத்த வேண்டும் என்றும் அங்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.**

## ரணில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது பசில் ராஜபக்சவிடம் ஜனாதிபதி இந்தத் தகவலைக் கூறியுள்ளார்.

மொட்டு கட்சியின் அனுசரணையுடனான அரச வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே களமிறக்கப்பட வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் பசில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.











# இன உறவைக் காத்து உன்னத தலைவன்

அரசியல் என்பதன் அர்த்தம் இப்போது மாறிவிட்டது.அது மக்கள் சேவைக்கான கருவி அல்ல கோடி கோடியாய் பணம் ஈட்டுவதற்கான கருவி என்று நிரூபிக்கப்பட்டு கொண்டு வருகிறது.

சாதாரண நிலையில் அரசியலுக்குள் நுழையும் அரசியல்வாதிகள் குறுகிய காலத்திற்குள் கோடீஸ்வரர்களாக மாறுவதை நாம் காண்கிறோம்.

இவற்றையெல்லாம் தாண்டி வெறும் ஒரு சிலர் மாத்திரமே உண்மையாகவே மக்களுக்காக உழைக்கின்ற அரசியல்வாதிகளாக இருக்கின்றனர்.

அவர்களுள் ஒருவராக மறைந்த தலைவர் பாலித தேவரப்பெருமவைக் காணலாம்.

அரசியல் தலைவர்கள் தோன்றுவதும் மறைவதும் வழமையான விடயம்.அப்படித் தோன்றியவர்கள் மறையும்போது அவர்களின் இழப்பை ஈடு செய்ய முடியாது என்று சொல்வதுண்டு.

அதற்கு அவர்கள் தகுதியானவர்களா இஇல்லையா என்று பார்த்து அப்படிச் சொல்வதில்லை. அவர்களுக்கு இறுதி கௌரவம் வழங்க வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு சொல்வர்.

உண்மையில் இந்த வசனத்துக்குத் தகுதியானவர்கள் ஒரு சிலர் மாத்திரம்தான். அவ்வாறானவர்களுள் பாலித தேவரப்பெருமவும் ஒருவர்.

மக்களோடு மக்களாக வாழ்ந்தார்இமக்களுக்காகவே வாழ்ந்தார்இமக்களுக்கு சேவை செய்தார்.இனவாதத்துக்கு எதிராக நின்றார்.அணைத்து இனங்களையும் அரவணைத்துப் போனார் என்றெல்லாம் சொல்லப்படுவது இவருக்குத்தான் நூறு வீதம் பொருந்தும்.

பணம் சம்பாதிப்பதற்காகவே அரசியலுக்கு வரும் இந்தக் காலகட்டத்தில் பணத்தைத் தூக்கி வீசிவிட்டு மக்களுக்காக மாத்திரமே அரசியலுக்கு வந்த சிறந்த தலைவன்.

மக்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் அந்த இடத்தில் பாலிதவைக் காணலாம். தான் ஒரு பௌத்தனாக இருந்தபோதிலும்இசிறு துளிகூட இனவாதம் இல்லாத மனிதன்.

அவரது மாவட்டத்தில் எங்கெல்லாம் தமிழ்இமுஸ்லிம் மக்களுக்கு எதிராக பேரினவாதம் கிளம்புகிறதோ அதை அடக்குவதற்காக அங்கெல்லாம் அவர் நிற்பார்.

பாலித பிரபல்யமடைந்ததே முஸ்லிம்களுக்கு எதிரான அளுத்கம-தர்காநகர் கலவரத்தின்போதுதான். அந்தக் கலவரத்தில் சிக்கிக்கொண்ட முஸ்லிம் குடும்பம் ஒன்றை தன் உயிரைக் கொடுத்துக் காப்பாற்றினார்.

அதற்காக அவர் பேரினவாதிகளிடம் இருந்து கடுமையான தாக்குதலுக்கு உள்ளானார்.

அந்த அடிகளையும் உதைகளையும் வாங்கித்தான் அந்த முஸ்லிம் குடும்பத்தைக் காப்பாற்றினார் பாலித.இல்லையென்றால், அந்தக் குடும்பத்தைக் கொன்றிருப்பார்கள் பேரினவாதிகள்.

அன்று எல்லா அரசியல்வாதிகளும் கைகட்டி பார்த்திருக்க பாலித மட்டும் துணிந்து களமிறங்கினார். உண்மையில் அன்றுதான் அவரது உயிர் பிரிந்திருக்க வேண்டும்.அந்தளவுக்கு அவரைத் தாக்கினார்கள் அந்தக் காடையர்கள்.

அதன் பின்னராவது அவர் அஞ்சினாரா? இந்தப் பணியில் இருந்து ஒதுங்கினாரா? இல்லை. அதன் பிறகும் எத்தனையோ சம்பவங்கள்.மதுகமவில் இந்து கோவிலுக்கு எதிராக பேரினவாதம் கிளம்பியபோது அதை அடக்கி அந்த கோவிலைப் பாதுகாத்ததே இந்த உத்தமன்தான்.

தெற்கில் வெள்ள அனர்த்தம் வந்தபோது மக்களை பாதுகாப்பதிலும் அவர்களின் பசியை ஆற்றுவதிலும் அவர் ஆற்றிய பங்கு அளப்பெரியது. மக்களோடு மக்களாக நின்று அவர் பட்ட கஷ்டத்தை நாம் கண்டோம்.

அடிப்படையில் அவர் சண்டியன்.அந்த சண்டித்தனம் அடுத்தவைக் கொல்வதற்கும் தாக்குவதற்கும் அல்ல.மக்களுக்கு சேவை செய்வதற்காக.

அரச அதிகாரிகளால் மக்களுக்கான சேவைகள் மறுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் அவர் அந்த சண்டித்தனத்தைப் பாவித்துத்தான் அந்த சேவைகளை பெற்றுக்கொடுத்தார்.

மக்களின் சேவைகளை மறுக்கிற- ஊழல்மிக்க அதிகாரிகளிடம் இருந்து சேவையைப் பெற்றுக்கொடுக்க இதுதான் வழி என்று காட்டினார் பாலித.

அவர் இரண்டு தடவைகள் எம்பியாக இருந்தார்இபிரதி அமைச்சராக இருந்தார்.அந்தப் பதவிகளை வைத்து ஏனைய அரசியல்வாதிகள்போல் பணம் சம்பாதிக்கவில்லை. ஊழல் புரியவில்லை. மக்களுக்கு சேவை செய்வதற்காகவே அதைப் பயன்படுத்தினார்.

2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று அவர் முடிவெடுத்தார்.காரணம் தேர்தலுக்கு பணமில்லை.ஆனால, மக்கள் விடவில்லை.அவர்களே பணம் செலவழித்து வெல்ல வைத்தனர்.

**பாலித பிரபல்யமடைந்ததே முஸ்லிம்களுக்கு எதிரான அளுத்கம-தர்காநகர் கலவரத்தின் போதுதான். அந்தக் கலவரத்தில் சிக்கிக்கொண்ட முஸ்லிம் குடும்பம் ஒன்றை தன் உயிரைக் கொடுத்துக் காப்பாற்றினார். அதற்காக அவர் பேரினவாதிகளிடம் இருந்து கடுமையான தாக்குதலுக்கு உள்ளானார்.**

மக்களிடம் வாக்குக் கேட்டு அரசியல்வாதிகள்தான் பணம் செலவழிப்பார்கள். ஆனால்இமக்களே பணம் செலவழித்து ஓர் அரசியல்வாதியை வெல்ல வைக்கும் அளவுக்கு அவர் மக்களின் மனங்களை கொள்ளையடித்திருந்தார்.

அவர் இறைவனிடம் கேட்டதெல்லாம் மக்களுக்கு சேவை செய்வதற்கான உடல் பலத்தைத்தான். பணத்தை அல்ல.

அப்படிப்பட்ட உன்னதமான மனிதனைத்தான் நாம் இன்று இழந்து நிற்கிறோம். அவரது இழப்பு என்றுமே ஈடுசெய்ய முடியவே முடியாது.



தொடர் - 04



சின்னத்தம்பி குருபரன்



# ஆட்டம் காணும் மஹிந்தவின் அரசியல் எதிர்காலம்

மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் சிறுபான்மையினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அராஜகத்துக்கான அறுவடை 2015 ஜனவரி 8 ஆந் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள், நள்ளிரவின் பின்னர் தமக்குப் பாதகமாக அமைந்தபோது அதனை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை..

அதனால் தேர்தல் முடிவுகளில் திட்டமிட்டதன்படி தமது சகாககளைப் பயன்படுத்தி பல தில்லுமுல்லுகளைச் செய்ய முனைந்தார். இதற்காக ஒன்றரை மணித்தியாலம் தேர்தல் முடிவுகளும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

மகிந்த ராஜபக்ச மீண்டும் ஜனாதிபதியாவதை விரும்பாத சர்வதேச சக்திகள் விழிப்படைந்து சில முன்னெடுப்புக்களை மேற்கொண்டன. இது விடயம் பல சர்வதேச ஊடகங்களில் மிக வெளிப்படையாகவே ஒலி, ஒளிபரப்பப்பட்டன.

இதற்குக் காரணம் மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் சீன சார்புக் கொள்கையைக் கடைப்பித்து இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய சமூக நாடுகளைப் புறந்தள்ளிச் செயறபட்டதோடு, மாலைதீவு சீனாவின் பக்கம் சார்வதற்கு மத்தியஸ்தராகச் செயற்பட்டமை பெரும் கடுப்பை ஏற்படுத்தியது.

அத்தோடு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தினை முடிவுக்குக்குக் கொண்டு வருவதற்கு ஆயுதங்கள், ஆட்பலம், தொழினுட்பம், ஆலோசனை ஆகியவற்றை வழங்கி விடுதலைப் புலிகள் தப்பிக்காத வகையில் உள்நாட்டில் வைத்தே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஆலோசனைகள் விமான ஓட்டிகள், மைக்ரோக் கமராக்களை வழங்கியது மாத்திரமற்றி, அமெரிக்கா புலிகளை வடக்கிலிருந்து பாதுகாப்பாக வெளியேற்றுவதற்குத் திட்டமிடுகின்றன.

அமெரிக்கா விடுதலைப் புலிகளைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு முன்பாக (கொத்தணி, பொஸ்பரஸ் போன்ற தடைசெய்யப்பட்ட குண்டுகளைப் பயன்படுத்தியாவது) யுத்தத்தை நிறைவு செய்யுமாறு ஆலோசனைகளை வழங்கிய இந்தியாவைப் புறந்தள்ளிச் செயற்பட்டமை. யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழககு மக்களுக்குப் 13 பிளஸ், மீழ்குடியேற்றம், புனர்வாழ்வு, புனர்நிர்மானம், இழப்பீடு, சிறையில் இருப்போரின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைத் தீர்வு, காணி விடுவிப்பு, அரசியல் தீர்வு என இந்திய அரசுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாது விட்டதோடு அவரும் அவரது சகாக்களும் மேடைகளில் மார்தட்டி வீர வசனம் பேசிக்கொண்டு திரிந்தனர்.

நாட்டைப் பாதுகாக்க வேண்டிய ஆட்சியாளர்கள் நாட்டைக் கொள்ளையடித்துக் கொண்டு பாதாள உலகக் குழுக்கள், சிறுபான்மையினலருக்கு எதிராக பௌத்த, சிங்கள அடிப்படைவாதக் குழுக்களை நடாத்திக் கொண்டு, அவர்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டு அவர்கள் செய்த அராசகங்களைக் கண்டும் காணாதது போல் மறைமுகமாக ஊக்குவித்துக் கொண்டிருந்தனர். இந்தப் போக்கு ஜனநாயக வழி அரசியல் செயற்பாடுகளை ஆட்டம் காண வைத்தது.

உள்ளூராட்சி மன்ற உறுப்பியர்கள், அரசியல் அடிவருடிகள், வக்காலத்து வங்கும் அரச உத்தியோகத்தர்கள், அதிகாரிகள், மாகாண சபை உறுப்பினர்கள், ஆளுனர்கள், அரசாங்க அதிபர்கள், பிரதம செயலாளல்கள், கட்சியின் மாவட்டத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மந்திரிமார் உட்படப் பலரும் குட்டி ராஜாக்கள் போல் செயற்பட்டனர்.

அவர்களைக் கண்டிப்பதை விடுத்து ஊக்குவித்துக் கொண்டிருந்தார். மேர்வின் டி சில்வா, கலகொட அத்தே ஞானசார தேரர், அத்துரலிய ரத்தின தேரர் போன்றோரர் எந்தத் தயக்கமுமின்றி பொது வெளியிலும், ஊடகங்களுக்கு முன்னாலும் அட்டகாசம் காட்டிக் கொண்டு திரிந்தனர்.மக்கள் பட்ட வேதனையைப் பொருட்டாகவே கொள்ளவில்லை.

வெளிநாடுகளிலும், சர்வதேச நிதி நிறுவனங்களில் இருந்தும் உள்நாடுகளில் இருந்தும் பெற்ற கடன் தொகைகளை கண்டபடி செலவு செய்து பல திட்டங்களை இடை நடுவில் விட்டனர்.

பல திட்டங்களின் பணத்தினைச் சகலரும் பங்கு போட்டு ஒரு சொற்ப தொகையைக் கொண்டு திட்டங்களைச் செய்து முடித்தனர்.

எங்கும் எதிலும், ஊழல் மோசடிகள் மலிந்திருந்தன. தட்டிக் கேட்டவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். பலர் கொலை செய்யப்பட்டார்கள். இந்த ஊழல் மோசடிகளுக்கு உடன்படாத உயர் அதிகாரிகள் பலர் தண்டிக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டார்கள்.

இன்னும் சிலர் பதவி பறிக்கப்பட்டு இணைப்புச் செய்யப்பட்டார்கள்.அதே போல் உண்மையை வெளிப்படுத்திய பல அரசியல்வாதிகள் பலர் தமிழ் சினிமாப் பாணியில் தண்டிக்கப்பட்டு, பதவி பறிக்கப்பட்டார்கள்.

தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் அரசியல் அபிலாசைகள், அவர்களின் பூர்வீக வாழ்விடங்கள், தேசியம், தனித்துவம், சமய, கலாசார உரிமைகள் ஆசியன மதிக்கப்படாமல் இலங்கையில் 'சிறுபான்மை என்றொரு இனம் இல்லை' என வாய்கூசாமல் கூறியதோடு 'எல்லாருமே பெரும்பான்மையினர்தான்' எனக் கூறிய மஹிந்தவிடம் இருந்து நீதி, சமத்துவம், சகோதரத்துவத்தை எதிர்பார்க்க முடியுமா?.

அப்படியெனில் இலங்கையில் பெரும்பான்மைச் சிங்கள, பௌத்த மக்கள் அனுபவித்த அரசியல், கல்வி, பொருளாதார உரிமைகள், சலுகைகள், வாய்ப்புக்கள் அனைத்தையும் அனுபவித்திருக்க வேண்டுமே.

அவர்கள் அனுபவித்த அரசியல் உரிமைகள், தேசியம், தனித்துவம், நீதி, சமத்துவம் ஆகியவற்றையும் அச்சம், தங்கு தடையின்றி அனுபவித்திருக்க வேண்டுமே. அதுவும் செய்யவில்லை.

கல்வியில், தொழில் வாய்ப்பில், நீர்பாசனக் குடியேற்றத் திட்டங்களுக்கான இட ஒதுக்கீட்டில், அமைச்சர், இராஜாங்க அமைச்சர் வழங்குவதில் சமத்துவம் பேணி இருக்க வேண்டுமே. இவற்றை இனவிகிதாசாரப்படி வழங்காமல் சுதந்திரத்துக்குப் பின்னர் வந்த ஆட்சியாளர்கள் தட்டிக் கழத்தமையே நாட்டின் இன்றைய அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடிக்குக் காரணமாய் அமைந்தன.

இலங்கையில் 1915, 1956, 1978, 1983 ஆம் ஆண்டுகளில் சிறுபான்மையினருக்கு எதிராக ஏவிவிடப்பட்ட கலவரங்கள் யாவும் 26 வருடகால அரசுக்கு எதிரான யுத்தத்துக்கு வழிவகுத்தன.

யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் 10 ஆண்டுகள் ராஜபக்சக்களின் ஆட்சி நாட்டில் இருந்தது.அக்காலப் பகுதியில் சிறுபான்மையினரின் தேசிய நலனில் அக்கறை எடுத்துப் புரையோடிப் போயிருந்த அரசியல், கல்வி, சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க முனைந்திருக்கலாம். அதனைச் செய்யாமல் விட்டமையும் அவரின் தோல்விக்குக் காரணமாய் அமைந்தன.

தொடரும்...


# நாமலுக்கே தெரியாதாம்

நாமல் ராஜபக்சவை மொட்டு கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டமைக்கு கட்சிக்குள் சிலர் ஆதரவு தெரிவித்து வருகிறார்கள்.சிலர் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள்.

இருந்தாலும்,தான் இப்படி நியமிக்கப்படவிருப்பது நாமலுக்கே தெரியாதாம்.

மஹிந்தவின் வீட்டில் இடம்பெற்ற மொட்டு கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில்தான் இந்த நியமனம் இடம்பெற்றது.

அன்று எல்லோரையும்போல் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகத்தான் நாமல் சென்றாராம். அங்கு வைத்து அவர் தேசிய அமைப்பாளராக நியமிக்கும்வரை இதுபற்றி அவருக்கு எதுவுமே தெரியாதாம்.






# சஜித்துடன் 40...

எதிர்வரும் தேர்தல்களில் வெற்றிபெருவதற்காக அரசியல்வாதிகள் அவர்கள் விரும்புகிற கட்சிகளின் பக்கம் பாயும் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதை இப்போது அவதானிக்க முடிகிறது.

அதற்கான பேச்சுக்களும் இடம்பெற்ற உள்ளன.அந்த வகையில் ஐக்கிய சக்தியில் இருந்து பல எம்பிக்கள் ஜனாதிபதி ரணிலுடன் இணையவுள்ளனர் என்று ரணில் தரப்பில் இருந்து சொல்லப்படுக்காது.

அதேவேளை,அரச பக்கம் இருந்து சஜித் த்தலைமையிலான கூட்டமைப்பில் 40 எம்பிக்கள் இணையவுள்ளார்களாம்.

கூட்டமைப்பை அறிவிக்கும் அன்றைய தினம் அவர்களுள் 6 பேர் இணைவர்களாம்.பின்னர் மிகுதி எம்பிக்கள் இணைவார்களாம் என்று சஜித் தரப்பு கூறுகிறது.



## துப்பறிவாளன்

# ஆர்வத்துடன் உள்ளாராம்

ஜேவிபியின் தலைவர் அனுரகுமார திஸ ாநாயக்க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசா ஆகிய இருவரும் விவாதம் ஒன்றில் ஈடுபடுவதற்கான முயற்சியில் இருப்பதை நாம் அறிவோம்.

இதைக் கண்டுகளிப்பதற்கு பலர் ஆர்வமாக உள்ளார்கள்.அதிலும் அதிகம் ஆர்வமாக இருப்பவர் ஜனாதிபதிதானாம்.

ஏன் தெரியுமா..?

எதிர்க்கட்சிகள் இரண்டும் இப்படி மோதிக்கொண்டால் அதனால் நன்மையடையப் போவது அரசாங்கம் என்பதால்தான் இந்த ஆர்வமாம்.

மேலும், இந்த விவாதத்தில் அவர்கள் இருவரின் பொருளாதார கொள்கை என்னவென்பதும் தெரிந்துவிடும். அதுவும் ஜனாதிபதிக்கு வாய்ப்பாக அமைந்துவிடுமாம்.

# விரட்டிய மைத்திரி: தப்பினார் சந்திரிகா

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பதில் தலைவர் நிமால் சிறிபாலடி சில்வா,பதில் செயலாளர் துமிந்த திஸாநாயக்க,லசந்த அழகியவண்ண, மஹிந்த அமரவீர, பைசல் முஸ்தபா ஆகியோர் இலங்கை மன்றக்கல்லூரியில் அறையொன்றில் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

அவர்களோடு சந்திரிகாவும் சேர்ந்துகொண்டார். அங்கு மைத்திரிபால சிறிசேனபற்றி பேசப்பட்டதால் சந்திரிகாவும் அவர்பற்றி ஒரு தகவலை கூறினார்.

“மைத்திரி அடிக்கடி என்ட ஊட்டுக்கு வந்து என்ன கட்சில சேர சொன்னார். அவர்ட கதைய கேட்டு கட்சிக்கு வந்திருந்தா உங்களுக்கு நடந்ததுதான் எனக்கும் நடந்திருக்கும்.என்னயும் வெளிய போட்டிருப்பார். மைத்திரிய நம்பவே ஏலாது. அவர எனக்கு நல்லா தெரிஞ்சதாலதான் நான் வரல்ல.“

“அவருக்கு உதவிய எல்லாருக்கும் வெட்டிப்போட்டார். 2015 தேர்தலில் அவருக்காக வேல செஞ்ச எல்லாருக்கும் துரோகம் செஞ்சிட்டார் .

– என்று மைத்திரிப்பற்றி அடுக்கிக்கொண்டே போனார் சந்திரிகா.



# சந்திரிகாவிடம் இருக்கும் CR புத்தகம்

மைத்திரியால் வெட்டப்பட்ட ஆட்கள் நிறைய உள்ளார்களா என்று அதில் கலந்துகொண்ட எம்பி ஒருவர் சந்திரிகாவிடம் கேட்டார்.

என்னிடம் ஒரு CR புத்தகம் நிறைய அவ்வாறு பாதிக்கப்பட்ட ஆட்களின் பெயர்கள்தான் உள்ளன என்று கூறினார் சந்திரிகா.

மேலும்,எனக்கு தேர்தலில் போட்டியிடும் திட்டம் இல்லை.எனது தாயும் தந்தையும் கஷ்டப்பட்டு உருவாக்கிய இந்த கட்சி அழிந்துகொண்டு போவதைப் பார்த்துக்கொண்டு என்னால் சும்மா இருக்க முடியவில்லை. அதைக் காப்பாற்றுவதற்காகவே நான் இதில் தலையிட்டுள்ளேன் என்று சந்திரிகா அங்கு அவர்களிடம் கூறினார்.

நிச்சயமாக இதை வெற்றிக் கட்சியாக என்னால் மாற்ற முடியும் என்றும் சந்திரிகா அங்கு உறுதியளித்தார்.



# ரணில்-மைத்திரி ரகசிய சந்திப்பு

சுதந்திர கட்சி எம்பிக்கள் சிலர் ரணிலுடன் சேர்ந்துகொண்டமைக்காகவே அவர்களை கட்சி பொறுப்புகளில் இருந்து நீக்கினார் மைத்திரி.

அப்படி இருந்தும்கூட,தனது சொந்தத் தேவைக்காக ஜனாதிபதியை சில நாட்களுக்கு முன் சந்தித்தாராம் மைத்திரி. அந்த சந்திப்பின் ஊடாக அந்தத் தேவையையும் நிறைவேற்றிக்கொண்டாராம்.

மைத்திரியின் இந்த இரட்டை வேடத்தை அவரால் கட்சி பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட அந்த எம்பிக்களே அம்பலப்படுத்தியுள்ளார்கள்.

# ITC ரத்னதீப ஆடம்பர ஹோட்டல் திறப்பு



ITC Limited நிறுவனத்தின் முழுமையான துணை நிறுவனமான WelcomHotels Lanka (Private) Limited நிறுவனத்தினால் திறந்துவைக்கப்பட்டுள்ள ITC ரத்னதீப ஆடம்பர ஹோட்டல் தொகுதி இலங்கையின் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையை வளப்படுத்துவது என்ற உறுதிப்பாட்டுடன் கொழும்பில் விண்ணைத் தழுவும் மாணிக்கப் படிகமாக மிளிர்கின்றது.

ITC ஹோட்டல் குழுமத்தின் விருந்தோம்பலின் பிரதான சின்னமாக விளங்கும் ITC ரத்னதீப ஆடம்பர ஹோட்டல் தொகுதி, இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் தலைமையில், கௌரவ பிரதமர் தினேஷ் குணவர்த்தன, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் மேன்மை தங்கிய சந்தோஷ் ஷா மற்றும் ITC Ltd இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் சஞ்சீவ் பூரி ஆகியோரின் பங்குபற்றலுடன் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

# Softlogic இன் StockGPT அறிமுகம்



இலங்கையின் நிதிசார் தொழில்துறையில் இதுவரை காலமும் காணப்பட்ட நிலையை முற்றிலும் வேறுபட்ட விதத்தில் அணுகும் ஒரு மூலோபாய நடவடிக்கையாக, Softlogic Capital PLC இன் முழு-சேவை தரகுப் பிரிவான Softlogic Stockbrokers பிரிவின் உள்ளக தொழில்நுட்பக் குழுவால் உருவாக்கப்பட்ட StockGPTI நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

StockGPT மென்பொருள் தொழில்நுட்பமானது Microsoft Azure OpenAI ஐ சேவை உட்பட அதிநவீன செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறது.

கொழும்பு பங்குச் சந்தையில் (CSE) பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பில் முதலீட்டாளர்கள், நிதி ஆய்வாளர்கள் மற்றும் நிதி முகாமைத்துவத்தினருக்கு முன்னொறுபோதும் இல்லாத மற்றும் உடனடி அணுகலை வழங்க, நிகழ்நேர, நம்பகமான தகவல்களை வழங்குகிறது.

இப்போது www.stockgpt.lk மூலம் அணுகக்கூடிய StockGPT ஆனது கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் அறிக்கைகள் மற்றும் நிதித் துறை மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அறிக்கைகளில் இருந்து நம்பகமான மற்றும் நேரடியாக ஆதாரங்களை பகுப்பாய்வு செய்ய உருவாக்கப்பட்டுள்ளது. தேசியப் பொருளாதாரத்திற்கு அவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றிய தகவல்களையும் இந்த மென்பொருள் ஆராய்கின்றது.

சந்தை ஆராய்ச்சிக்காக பங்குத் தரகு நிறுவனங்களை மட்டுமே நம்பியிருப்பதன் சிரமங்கள் மற்றும் அதற்கான தீர்வு பற்றிய ஆராய தூண்டிய வாடிக்கையாளர்களின் கருத்துக்களில் இருந்து இந்த செயல்பாடு உருப்பெற்றது.

# சவூதி அரேபியாவில் சுற்றுலா - பொழுதுபோக்குக்கான இணைய வழிகாட்டி






(காலித் ரிஸ்வான்)

சவூதி சுற்றுலா ஆணையத்தால் 'ஏளைவை ளுயரனை' என்ற ஒரு இணையத்தளம் துவங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்தளமானது சவூதி அரேபியாவில் உள்ள சுற்றுலா மற்றும் பொழுதுபோக்குத் தளங்கள், உணவகங்கள், மால்கள், பாரம்பரிய சந்தைகள், ஹோட்டல்கள், கடற்கரைகள், அருங்காட்சியகங்கள் மற்றும் பூங்காக்கள் பற்றிய விரிவான வழிகாட்டியை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது.

புகைப் படங்கள் மற்றும் தேவையான இணைய லிங்க்கள் (Links), போன்றவற்றை உள்ளடக்கிய 'விசிட் சவூதி' இணையத்தளமானது, சவூதி நோக்கி வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஆர்வமுள்ள பல அம்சங்களை நோக்கி வழிகாட்டுகிறது.

ஹோட்டல் மற்றும் விமானச் சீட்டு முன்பதிவுகள், சவூதியின் அனைத்து நகரங்களிலும் கலாச்சார, பொழுதுபோக்கு, சமூக மற்றும் பருவகால நிகழ்வுகளுக்கான புதுப்பிக்கப்பட்ட வழிகாட்டி, சுற்றுலாத் தளங்களுக்கான வழிகாட்டல் வரைபடங்கள், உதவிக்குறிப்புகள் மற்றும் அறிவுறுத்தல்கள் போன்ற அனைத்தையும் இத்தளமானது கொண்டுள்ளது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இத்தளத்தினூடாக சவூதி அரேபியாவிற்குள் நுழைய சுற்றுலா விசாவிற்கு விண்ணப்பிக்கலாம் மற்றும் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன், இவ்விணையத்தளமானது ராஜ்யத்தில் உள்ள அழகான இயற்கை பன்முகத்தன்மை, வளமான கலாச்சார வேறுபாடு மற்றும் அற்புதமான நினைவுச்சின்னங்களையும் எனுத்துக்காட்டுவதாக அமைகிறது.

இவ்வறான முயற்சிகள் அனைத்தும் சவூதி அரேபியாவின் சுற்றுலாத்துறையினை மேம்படுத்துவதற்கும், அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப்பயணிகளை ஈர்ப்பதற்குமான ஏற்பாடுகளாகவே இருக்கின்றன. உலகின் முக்கிய சுற்றுலாத்தளங்களில் ஒன்றாக அண்மைய நாட்களில் சவூதி அரேபியா மாறி மக்களின் கவனத்தை ஈர்த்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பின்வரும் டமைை இன் மூலம் ஏளைவை Saudi தளத்தை அணுக முடியும்: https://www.visitsaudi.com/ar/calendar.



# LG Abans AC Academy மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பப் பிரிவோடு இணைவு

LG Abans AC Academy மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவகமான ((ITUM)) உடன் இணைந்து 2024 மார்ச் 27 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சிறப்புவாய்ந்த முன்னணி தொழில்நுட்பப் கல்விக்கூடாமாக திகழ்ந்துகொண்டிருக்கும் LG Abans AC Academy அதிநவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட நிறுவனமாக மிகவும் புகழ்பெற்றுள்ளது.

இதன்போது வளிச்சீராக்கிகளை நிறுவுவது முதல் சரியான சேவையை வழங்குவது வரை இங்கு உள்ளடக்கப்பட்ட சகல விடையங்களுக்குமான முறைசார் கல்வியறிவு வழங்கப்படுகிறது. ஹோமாகம, தியகமவில் அமைந்துள்ள மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் (ITUM) தொழில்நுட்ப நிறுவகத்தில் நிறுவப்பட்ட இந்த அக்கடமி குளிர்சாதனப் பெட்டிகள் தொடர்பான தொழில்நுட்பக் கல்வியை உயர் மட்டத்திற்கு உயர்த்த தயாராக உள்ளது.

LG Abans வளிச்சீராக்கி ஆக்காடமியில் தொழில்முறை மற்றும் தொழில்நுட்ப கல்விக்கு அப்பால் சென்று வலுவூட்டுகிறது.

வளிச்சீராக்கிகளுக்கு சமீபகரமான குறுகிய கால மற்றும் உயர்நிலைப் பாடத்திட்டங்களை கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைப்பதோடு, பாடசாலைகளை விட்டுச் சென்றவர்களுக்கு, தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு போன்று மிகப்பெரிய தொழிற்சாலைகளில் பராமரிப்பு சேவைகளை வழங்கும் ஊழியர்களுக்கு இங்கே பயற்சிகள் வழங்கப்படுகிறது.

வளிச்சீராக்கி தொழில்நுட்பம் தொடர்பான நவீன அறிவுசார்ந்த மற்றும் திறமையான உறுப்பினர்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

# மாதவிடாய் வறுமையை எதிர்த்துப் போராடும் Fems



Hemas Consumer Brands இன் சமூகப் பொறுப்புள்ள, பெண்களுக்கான சுகாதார பராமரிப்பு வர்த்தக நாமமான குநஅள, உள்நாட்டிலுள்ள மூன்று முக்கிய சுகாதார நப்கின் உற்பத்தியாளர்களில் ஒருவராக விளங்குவதில் பெருமை கொள்வதோடு, தற்போது இலங்கையில் உள்ள சுகாதார நப்கின்களுக்கான மொத்த தேவையில் 92% ஐ பூர்த்தி செய்கிறது.

கணிசமான முதலீட்டுடன் நிறுவப்பட்ட தனது அதிநவீன உற்பத்தி தொழிற்சாலையில் சுகாதார நப்கின்களை தயாரிப்பதற்காக, உயர்தர பொருட்களை Fems இறக்குமதி செய்கிறது.

உள்நாட்டில் தயாரிக்கப்படும் சுகாதார நப்கின்கள் குறைந்த வரிகளை கொண்டிருப்பதன் காரணமாக, எளிதாக அணுகக்கூடிய பெண்களுக்கான சுகாதார தயாரிப்புகளை Fems இனால் மிகவும் கட்டுப்படியான விலையில் வழங்க முடிகின்றது. இதன் மூலம் சமூகத்தில் சிறந்த தூய்மையையும், பொதுச் சுகாதாரத்தையும் மேம்படுத்த முடிகிறது.

2016 இல் முன்னெடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, சுமார் 50% ஆன குடும்பங்கள் மாதவிடாய் ஏழ்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதோடு, 15-47 வயதுக்குட்பட்ட 50% ஆன பெண்கள் 2016 ஆம் ஆண்டில் சுகாதார நப்கின்களுக்கு பணம் செலவிடுவதில்லை என கண்டறியப்பட்டது.

அந்த வகையில் சுகாதார நப்கின்களுக்கு கட்டுப்படியான தன்மையை ஏற்படுத்தும் வகையில், 'Fems AYA' எனும் உயர்தர சுகாதார நப்கினை, மிகக் குறைந்த விலை கொண்டதாக கடந்த 2021 ஜுனில் Fems அறிமுகப்படுத்தியது.




# ஹட்ச் மற்றும் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி இணைவு

இலங்கையில் தொலைதொடர்பாடல் துறையில் முன்னணி வகித்து வருகின்ற ஹட்ச் நிறுவனம், புத்தாக்கமான கடன் தீர்வுகள் மூலமாக ஹட்ச் விநியோகக் கூட்டாளர் வலையமைப்பிற்கு வலுவூட்டுவதற்காக, நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியுடன் கூட்டாண்மையொன்றை ஏற்படுத்தியுள்ளமை தொடர்பில் அறிவித்துள்ளது.

இலங்கையில் தொலைதொடர்பாடல்கள் துறையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொரு நடவடிக்கையை இக்கூட்டாண்மை குறித்து நிற்கின்றது.

ஹட்ச் முகவர் வலையமைப்பிற்கு வங்கி வழங்குகின்ற கடன் தீர்வுகள், விற்பனையை விரிவுபடுத்தி, தனிநபர் சந்தையின் தேவைகளை பூர்த்தி செய்யும் இலக்குடன் வழங்கப்படுகின்றன.

இக்கூட்டாண்மையானது ஹட்ச் முகவர் வலையமைப்பிற்கு தமது பணப்புழக்கத்தை நிர்வகிப்பதற்கான கூடுதல் நெகிழ்வுப்போக்கினை வழங்குவதுடன், எப்போதும் மாற்றம் கண்டு வருகின்ற சந்தையின் தேவைகளை சுறுசுறுப்பு மற்றும் நம்பிக்கையுடன் முன்னெடுத்துச்செல்லவும் இடமளிக்கின்றது.

ஹட்ச் நிறுவனத்தின் பிரதம நிதி அதிகாரி லலித் பெர்னாண்டோ அவர்கள் இம்முயற்சி தொடர்பில் கருத்து வெளியிடுகையில், “நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியுடனான எமது மூலோபாய இணைவானது வெறும் கூட்டாண்மை என்பதற்கும் அப்பாற்பட்டது. மிகவும் முக்கியமான வழங்கல் சங்கிலியில், பெறுமதிமிக்க ஹட்ச் வணிக கூட்டாளர் வலையமைப்பை மேம்படுத்தி, புதிய நிதித் தீர்வுகளை வழங்குவதற்கான ஒரு அர்ப்பணிப்பாக இது காணப்படுகின்றது,” என்று குறிப்பிட்டார்.

# டெல்வின் பெரேரா அமானா வங்கியின் பணிப்பாளர் சபையில்



மூன்று தசாப்த காலப்பகுதிக்கு மேலான அனுபவத்தைக் கொண்ட துறைசார் நிபுணரான டெல்வின் பெரேராவை தனது நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளராக நியமித்துள்ளதாக அமானா வங்கி அறிவித்துள்ளது.

2024 மார்ச் 28 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

35 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்ட டெல்வின், வங்கியியல் துறையில் நீண்ட காலம் பணியாற்றியுள்ளார். கொமர்ஷல் வங்கியில் ஆரம்பித்த இவரின் தொழில் வாழ்க்கை, பின்னர் செலான் வங்கியில் தொடர்ந்து, பிரதி பொது முகாமையாளராக பணியிலிருந்து ஓய்வு பெறும் வரையில் பல்வேறு தலைமைத்துவ நிலைகளில் பணியாற்றியுள்ளார்.

நுகர்வோர் வங்கியியல், வியாபார வங்கியியல், கடன் முகாமைத்துவம், இடர் முகாமைத்துவம் மற்றும் வர்த்தக நிதியியல் போன்ற பிரிவுகளில் டெல்வின் அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் வெஸ்டர்ன் சிட்னி பல்கலைக்கழகத்தின் வணிக நிர்வாகத்தின் மாஸ்டர் பட்டத்தை இவர் பெற்றுள்ளதுடன், அவுஸ்திரேலியாவின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் தகைமையையும் இவர் கொண்டுள்ளார்.




# WCIC Prathibhabhisheka Awards 2023 நிகழ்வுக்கு DFCC வங்கி வைர அனுசரணை

நிதியியல் உள்ளடக்கத்தின் மூலமாக பெண்களுக்கு வலுவூட்டுவதில் முன்னிலை வகித்து வருகின்ற ஒரு நிதி நிறுவனமான DFCC வங்கி, அண்மையில் இடம்பெற்ற மதிப்பிற்குரிய WCIC Prathibhabhisheka Women Entrepreneur Awards 2023 நிகழ்வுக்கு வைர அனுசரணையாளராகவும், வங்கிக் கூட்டாளராகவும் இணைந்து, பெருமையுடன் ஆதரவளித்துள்ளது.

தொழில்முயற்சியாண்மை மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை வளர்ப்பதில், குறிப்பாக இலங்கையின் பொருளாதாரத் துறையில் பெண்களின் வகிபாகத்தை ஆதரிப்பதில் DFCC வங்கி கொண்டுள்ள ஓயாத அர்ப்பணிப்பை இக்கூட்டாண்மை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

விருதுகள் வழங்கும் வைபவம் அண்மையில் மிகவும் விமரிசையாகவும், ஆடம்பரமாகவும் இடம்பெற்றுள்ளது. இலங்கை மற்றும் சார்க் பிராந்தியத்தில் அடுத்தவர்களுக்கு உத்வேகமளிப்பதில் முன்மாதிரியான பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு இம்மேடையில் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திற்கான மகளிர் சம்மேளனம் (Women's Chamber of Industry and Commerce - WCIC) என்பது இலங்கையில் பெண் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் தொழில்சார் பெண்களுக்கு ஆதரவளித்து, அவர்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற ஒரு உச்ச அமைப்பாகும்.

கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திற்கான மகளிர் சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்ற WCIC Prathibasheka Awards என்ற விருதுகள் நிகழ்வானது இலங்கையில் மிகச் சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்களின் சாதனைகளை அங்கீகரித்து, கொண்டாடும் நோக்குடன் இடம்பெற்று வருகின்றது.

# Bailer Machine கையளிப்பு



மார்ச் மாதம் நடைபெற்ற உலக மீள்சுழற்சி தினத்தன்று, ஊழஉய-ஊழடய நிறுவனம், ஹழசடன ஏளைழைெ லங்காவுடன் இணைந்து, ASPIRE திட்டத்தின் கீழ் ஏழு மீள்சுழற்சி சேகரிப்பாளர்களை கௌரவித்து, அவர்களுக்கு Bailer Machineகளை வழங்கியது.

இந்த முயற்சி, சிறுதொழில் நிறுவன மீள்சுழற்சி சேகரிப்பாளர்களை நிர்வகிப்பதில் மேலும் பங்களிப்புச் செய்ய வாய்ப்பு வழங்கியுள்ளது.

குறிப்பாக, இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், சுற்றுச்சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான வளர்ச்சி தொடர்பான துறை மேற்பார்வை குழுவின் தலைவருமான கௌரவ அஜித் மன்னப்பெரும, இலங்கையில் மீள்சுழற்சியை மேலும் மேம்படுத்துவதற்கான தனது மகிழ்ச்சியையும் ஆதரவையும் வெளிப்படுத்தினார்.



# வணிக நிறுவனங்கள் உயர்ந்த இடத்தை அடைவதற்கு Cinnamon இன் வாய்ப்புக்கள்

4.5 மில்லியன் சதுரஅடியைக் கொண்ட தொகுதி, பிரமிக்க வைக்கும் 30 மாடி கோபுரத்துடன் கூடிய இலங்கையின் முன்னணி கலப்புத் திட்டமான சினமன்ட் லைஃப் தனது புதிய அலுவலக இடரப்பரப்பின் ஊடாக வணிகங்கள் புதிய உயரத்தை அடைவதற்கான வாய்ப்பையும், அவற்றுக்குப் புதிய முகவரியையும் வழங்கவுள்ளது.

கொழும்பின் நிதி கேந்திரநிலையத்தின் மையப்பகுதியில் அதாவது கொழும்பு துறைமுக நகரத்துக்கும் பிரதான வீதிகளுக்கும் இடையில் அமைந்துள்ள சினமன்ட் லைஃப், கோப்ரேட் நிறுவனங்களுக்கு உயர்தர வாழ்க்கை முறையுடனான நவீன பணியிட வசதி, உணவு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள், சினமன்ட் லைஃப் ஹோட்டல்கள், கடைத்தொகுதிகள் மற்றும் குடியிருப்புக்களுடனான இடையறாத தொடர்புகளின் ஊடாக வணிகம், பொழுதுபோக்கு ஆகியவை ஒன்றாகக் கலந்த அனுபவத்தை வழங்கும்.

இந்த வணிகக் கோபுரத்தில் 24 மாடிகள் அலுவலக இடப்பரப்புக்காக ஒதுக்கப்பட்டிருப்பதுடன், ஐந்து மாடிகள் வாகனத் தரிப்பிடத்துக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தளமும் 10,564 சதுரஅடியுடன் ஒப்பிடமுடியாத இடப்பரப்பைக் கொண்டமைந்திருப்பதுடன், பரந்துபட்ட வணிகங்களுக்கான தேவையை நிவர்த்தி செய்யக் கூடியதாகவும், அவற்றின் செயற்பாடுகள் மற்றும் வளர்ச்சிக்கு உகந்த சூழலையும் வழங்கக்கூடியதாக அமைந்துள்ளன.

இந்தக் கோபுரத்தின் ஒவ்வொரு தளத்திலும் அடுத்த தலைமுறைக்கான அலுவலக இடப்பரப்புக்கள், அடுத்த தலைமுறைக்கான தொழில்துறைக்கு முன்னேற இருக்கும் நிறுவனங்களுக்கு உறுதியளிப்பவையாக அமைகின்றன.





# HNB இற்கு சிறந்த வாடிக்கையாளர் விருது

Asian Banker Global Excellence in Retail Financial Services Awards 2024 நிகழ்வில் 14 வது ஆண்டாக இலங்கையின் சிறந்த வாடிக்கையாளர் வங்கியாக தரவரிசைப்படுத்தப்பட்டதன் பின்னர், HNB PLC தனது மேலாதிக்க தலைமைத்துவ நிலையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

புகழ்பெற்ற ஏசியன் பேங்கர் இதழால் நடத்தப்படும், இந்த விருதுகள் உலகின் வாடிக்கையாளர் நிதிச் சேவைகளுக்கான மிகவும் கடுமையான மற்றும் செல்வாக்குமிக்க திட்டங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றன.

மேலும் ஸ்திரத்தன்மை, புத்தாக்கம், டிஜிட்டல் செயலாக்கம் மற்றும் செயல்முறை மறு – பொறியியல் ஆகியவற்றில் புதிய வரையறைகளை நிறுவும் பிராந்திய நிறுவனங்களை வெளிப்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளன. விரைவான, நிலையான வளர்ச்சியை மேம்படுத்துகின்றன.

14 ஆண்டுகளாக வாடிக்கையாளர் வங்கித் துறையின் தலைமைத்துவத்தைத் தக்கவைத்துக்கொள்வதில் எங்களின் வெற்றி, எங்கள் அணுகுமுறைக்கு மேலும் சரிபார்ப்பை அளிக்கிறது. மேலும் முன்னோக்கிச் செல்வதற்கான எல்லைகளை அடைய முயற்சி எடுக்கின்றது." என HNBஇன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜொனதன் அலஸ் தெரிவித்தார்.

# ஐந்து தங்க விருதுகளை வென்ற LOLC

இலங்கையின் முன்னணி வங்கியல்லாத நிதி நிறுவனமான (NBFI) LOLC பைனான்ஸ் பிஎல்சி, "'LankaPay Technnovation Awards - 2024" இல் ஐந்து மதிப்புமிக்க தங்க விருதுகளைப் பெற்றதன் மூலம் டிஜிட்டல் நிதித் துறையில் மீண்டும் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.

இந்த சாதனையானது LOLC ஃபைனான்ஸின் நிபுணத்துவம் மற்றும் டிஜிட்டல் நிதியியல் துறையில் புதுமைகளை வலுப்படுத்துகிறது, மேலும் நிதித்துறையில் முன்னோடியாக அதன் நிலையை மேலும் உறுதிப்படுத்துகிறது.

பல ஆண்டுகளாக, நிறுவனம் ரொக்கமில்லா (நாணயம் மற்றும் நோட்டு) பொருளாதாரத்தை நோக்கி நாட்டை ஊக்குவிக்கும் பல முயற்சிகளுக்கு முன்னோடியாக உள்ளது, நிதி உள்ளடக்கம் மற்றும் வாடிக்கையாளர் மையத்திற்கு முன்னுரிமை அளிக்கிறது.

இலங்கையின் நிதித்துறையில் தொழில்நுட்ப வல்லமை மற்றும் புதுமைகளைக் கொண்டாடும், மதிப்புமிக்க டெக்னோவேஷன் விருதுகள், தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் சிறந்து விளங்கும் முன்னோடிகளை வெளிப்படுத்துகிறது. LOLC ஃபைனான்ஸ் ஐந்து தங்க விருதுகளை வலுவான போட்டியாளர்களிடமிருந்து வென்றது.

